**தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைய - 2024**
-----------------------------------------------------------------------------------

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமான கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுககான குறிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களானது 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் கர்ட்டும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாகப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இலங்கை கணக்காய்வு நியமங்களின் கீழுள்ள எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அதிகாரசபையை தொடர்ந்து செயற்படுத்தும் இயலுமையை தீர்மானித்தல், முகாமைத்துவத்தின் பொறுப்பானதுடன் முகாமைத்துவமானது அதிகாரசபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் அதிகாரசபையை தொடர்ச்சியாக செயற்படுத்துவதற்றிய விடயங்களை வெளிப்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை பரீட்சிக்கும் பொறுப்பு தொடர்புபட்ட தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதானது அவை தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்தில் இல்லாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் எண்ணத்தில் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான புரிந்துரணர்வு பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டது.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக அதிகாரசபையினை தொடர்ச்சியாக செயற்படுத்துவது தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட கணக்கீட்டிற்காக நிதியத்தினை தொடர்ச்சியாக செயற்படுத்துவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்த தன்மை தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத் தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது அதிகாரசபையின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபையின் செயற்பட்டுள்ளதாக,

- தனது அதிகாரம் கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் பிரகாரம் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தோன்றிய காசுப் பாய்ச்சலின் கீழ் முற்பணப் பெறுவனவுகள் ரூபா 9,799,000 அதிகரித்தும் வருமானவரி கொடுப்பனவுகள் 600,000,000 குறைத்தும் செம்மையாக்கியதன் காரணமாக செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தோன்றிய காசுப் பாய்ச்சல் ரூபா 609,799,000 அதிகரித்து காட்டப்பட்டிருந்ததுடன் ஊழியர் கடன் மற்றும் இடர் கடன் கொடுக்கல் வாங்கல்களை காசுப் பாய்ச்சல் கூற்றில் செம்மையாக்காததன் காரணமாக செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தோன்றிய காசுப் பாய்ச்சல் ரூபா 1,980,577 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும் திறைசேரி உண்டியல்கள் நியாயமான வைப்புக்கள் சேமிப்பு வைப்புக்கள் என்பவை மீதான வட்டி வருமானம் | கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குறைத்து காட்டப்பட்டிருந்ததன் காரணமாக ஆண்டிற்கான முதலீட்டு வருமானங்களிலிருந்து தோன்றிய காசுப் பாய்ச்சல் ரூபா 607,687,881 குறைத்து காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 43 ஆம் பந்தியின் பிரகாரம் காசுப் பாய்ச்சலுக்கு தாக்கமளிக்காத சுகாதார அமைச்சிடமிருந்து இலவசமாகப் பெற்ற வாகனங்களின் தகவல்களும் சொத்துக்களை மீள்மதிப்புச் செய்தல்களின் தகவல்களும் காசுப் பாய்ச்சல் கூற்றிற்கு வெளியே நிதியற்ற முதலீடுகள் மற்றும் நிதி நடவடிக்கைகளாக தனியாக வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுகாதார அமைச்சிடமிருந்து பெற்ற வாகனங்களின் தகவல்கள் 2025 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் மூலம் சரியாக வெளிப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்டும். | -மேற்படி- |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 08 இன் 42 ஆம் பந்தியின் பிரகாரம் சரி செய்யப்பட வேண்டிய ரூபா 1,918,376 முன்னைய ஆண்டுகளின் பிழைகள் நேரடியாக மீளாய்வாண்டில் திரண்ட நிதியத்தறிகு செம்மையாக்கபபட்டிருந்த போதிலும் ஒப்பீட்டு ரீதியான பெறுமதிகளை மீண்டும் வெளிப்படுத்துவதற்கு மற்றும் ஆரம்ப மீதிகளை மீளக் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடங்களை எதிர்வரும் காலங்களில் சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (ஈ) | வரிக் கணிப்பினை சரியாக செய்யாமையின் காரணமாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் மதிப்பீடு செய்த ரூபா 59,778,781 மிகைக் கட்டணம் அதிகாரசபையினால் செலுத்தப்படாதிருந்ததுடன் தீர்த்துவைக்கப்படாத அந்த நிகழத்தக்க வரிப் பொறுப்பு இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 12 இன் 88 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 12 இன் 88 ஆம் பந்தியின் பிரகாரம் வெளிபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (உ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் 07 ஆம் பந்தியின் பிரகாரம் அதிகாரசபையினால் பல ஆண்டுகளாக பயன்படுத்துகின்ற நான்கு அலுவலக கட்டிடம், தேசிய மருந்தின் தரத்தை பாதுகாக்கும் ஆய்வுகூடம், ஸ்தாபிக்கப்பட்டுள்ள மூன்று மாடி கட்டிடம் மற்றும் அக்கட்டிடங்கள் அமைந்துள்ள | இச்சொத்துக்களை அதிகாரசபையினால் பொறுப்பேற்பதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | காணிகளை பெறுமதி செய்து கணக்கீடு செய்வதற்கு நவடிக்கை எடுக்கப்படவில்லை. | | |
| (ஊ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் 36 ஆம் பந்தியின் பிரகாரம் மிள்மதிப்பீடு செய்யும் பொது உரிய சொத்துக்கள் வகுப்பு முழுமையாக மீள்மதிப்பு செய்யப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையினால் அதற்கு முரணாக மீளாய்வாண்டின் போது ரூபா 60,383,250 கிரயமான தளபாடங்கள், அலுவலக உபகணைங்கள் கணனி மென்பொருட்கள் ஆகிய 03 வகுப்புக்களுக்குரிய சொத்துக்களில் ரூபா 10,018,741 கிரயமான ஒரு பகுதி மாத்திரம் மீள்மதிப்புச் செய்யப்பட்டிருநதது. | சொத்துக்களின் மீள்மதிப்பு சம்பந்தமாக இன்னும் ஆராயந்து பார்த்து எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (எ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் 39 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டில் ரூபா 10,018,741 ஆன மீள்மதிப்பு மிகை விபரமான வருமான கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.<br>அவ்வாறே ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மீள்மதிப்பு சம்பந்தமாக இந்த நியமத்தின் 77 ஆம் பந்தியின் பிரகாரம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் இது சரிசெய்யப்படும். | -மேற்படி- |
| (ஏ) | இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் இலக்கம் 16 இன் 47 ஆம் பந்திக்கு முரணாக ரூபா 49,200,000 ஆக பயன்படுத்தும் உரிமையுடனான ஒரு கட்டிடம் அதிகாரசபையினால் மீளாயவாண்டிற்கான ஆதனம், பொறி மற்றும் உபகரண்ஙகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | 2025 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (ஐ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் 61 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் வினைத்திறனான ஆயுள்காலம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு புத்தகப் பெறுமதி பூச்சியமான ரூபா 37,029,426 கிரயமுள்ள 166 சொத்து விடயங்கள் இன்னும் பயன்படுத்தப்பட்டு வருவதுடன் நியமத்தின் 76 ஆம் பந்தியின் பிரகாரம் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை | சொத்துக்களின் மீள்மதிப்பு சம்பந்தமாக மேலும் ஆராயந்து பார்த்து எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (ஒ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 38 இன் பிரகாரம் கணனி மென்பொருட்கள் கட்புலனாகா சொத்துக்களாக காட்டப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையினால் அந்த நியமத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படாது ரூபா 10,233,149 ஆன கணனி மென்பொருட்கள் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் காட்டப்பட்டிருந்தன. | உரிய வெளிப்படுத்தல்களை அடுத்துவரும் நிதிக்கூற்றுக்களில் சரிசெய்லவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நேரடியாக வங்கிக்கு கிடைத்திருந்த ரூபா 19,249,180 இனை முறைப்படியாக அடையாளங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது அடையாளங்காணப்படாத வைப்புக்களாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | இந்த நேரடி பெறுவனவுகளை அச்சந்தர்ப்பத்திலேயே அடையாளங்காணும் இயலுமை சம்பந்தமாக பின்பற்றக்கூடிய நடைமுயையினை தயாரித்தலினை பிரிவுத் தலைவர், வங்கி நிறுவனம், தொழில்நுட்ப அறிவுள்ள நபர் ஆகியோருடன் கலந்துரையாடப்பட்டு வருகின்றது. | வருமானத்தை உறுதியாக அடையாளங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டின் போது சுகாதார அமைச்சிடமிருந்து கிடைத்த ஆய்வுகூட உபகரண இருப்பு அரசாங்கத்தின் மானியமாக கணக்கீடு செய்யப்படாது மீள்மதிப்பு இலாபத்தின் கீழ் காட்டியதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான நிதி நிலைமைக் கூற்றில் மீள்மதிப்பு இலாபம் ரூபா 64,275,375 அதிகரித்தும் அரசாங்க மானியம் அத்தொகையால் குறைத்தும் காட்டப்பட்டிருந்தது. | 2025 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் இந்த அரசாங்க மானியமும் மீள்மதிப்பு இலாபமும் தனித்தனியாக காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அரசாங்க மானியம், மூலதனம் மற்றும் மீள்மதிப்பு இலாபம் சரியாக அடையாளங்காணப்பட்டு வகைப்படுத்தி கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைதுத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|

தொடர்பு

(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | (i) | II ஆம் அத்தியாயத்தின் 8.1 ஆம் பந்தி | மருந்து மதிப்பீட்டு உத்தியோகத்தர் பதவிக்காக உள்ளீர்க்கப்பட்ட 07 உத்தியோகத்தர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லைல். | உள்ளீர்ப்புக்குரிய அறிவுறுத்தல்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்படட உடன் உரிய நியமனக் கடிதங்கள் வழங்கப்படும். | தாப விதிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | (ii) | VII ஆம் அத்தியாயத்தின் 12.2.6 ஆம் பந்தி | அமைச்சு செயலாளரின் அங்கீகாரமின்றி 04 பதவிகளில் பதில் கடமை பார்ப்பதற்காக ரூபா 178,750 படி செலுத்தப்பட்டிருந்தது. | 04 பதவிகளுக்காக பதில் கடமை பார்க்கும் உத்தியோகத்தர்களை நியமித்தல் மற்றும் கொடுப்பனவு செய்தல் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் செய்யப்படலாம் என சுகாதார அமைச்சின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | (i) | நிதிப்பிரமாணம் 371 (2)(அ) | உச்ச அளவு சில்லறைக்காக உபகட்டு நிதியான ரூபா 25,000 இனை மிகைத்து ரூபா 50,000 வீதம் 03 சில்லறை காசு உபகட்டுநிதிகள் வழங்கப்பட்டிருந்தன. சில்லறைக் காசு உபகட்டு நிதியிலிருந்து ஒரு தடவைக்கு செலுத்தக்கூடிய உச்ச அளவு ரூபா 5,000 இனை மிதைத்து 44 சந்தர்ப்பங்களின் போது ரூபா 142,845 செலவு | 2025 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து உச்ச அளவு சில்லறை காசு கட்டுநிதி ரூபா 25,000 தொகையும் ஒரு தடவைக்கு செலுத்தப்படக்கூடிய உச்ச அளவு ரூபா 5,000 தொகையுமாக பின்பற்றப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செய்யப்பட்டிருந்தது. | | |
| (ii) | நிதிபபிரமாணம் 371(2)(ஆ) | மீளாய்வாண்டில் உச்ச அளவான குறித்த செயலுக்கான உபகட்டு நிதியாகிய ரூபா 100,000 இனை மிகைத்து 04 பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு மொத்தமாக ரூபா 1,023,000 ஆன 05 கட்டுநிதிகள் வழங்கப்பட்டிருந்தன. | கட்டுநிதியை பதவி நிலை உத்தியோகத் தர்களுக்கு மாத்திரம் வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (iii) | நிதிபபிரமாணம் 571 | 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 02 ஆண்டுகளை மிகைத்திருந்த ரூபா 2,318,598 வைப்புக்களை தீர்த்துவைப்பதற்கு அல்லது வருமானத்திற்கு செலவுவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2025 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (இ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயறசிகள் சுற்றறிக்கையின் மூலம் வெளியிடப்பட்ட அரசாங்க தொழில் முயற்சிகளுக்கான நிறுவன ரீதியான கட்டுப்பாட்டு வழிகாட்டிக் கோவையின் 2.6 ஆம் பந்தி | செயற்பாடுகளின் தன்மைக்கு இணங்க தகமையுள்ள ஒரு நபரினை சபை செயலாளராக நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்காது பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் பணிப்பாளர் சபை செயலாளராக செயற்பட்டிருந்தார். | மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை அதிகாரச் சட்டத்தினை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றத. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் | பிணைவைக்க வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து உரிய பிணைப் பணத்தை பெற்றுக்கொள்தற்கு நடவடிக்கை | அடுத்துவரும் சில மாதங்களுக்குள் பிணைவைக்கும் நடவடிக்கையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | 09 ஆம் பந்தி | எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்படும். | |
| (உ) | 2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய 05/2008 ஆம் இலக்க 2018 சனவரி 24 ஆந் திகதிய 05/2008(1) ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை | அதிகாரசபை ஸ்தாபிக்கப்பட்டு 10 ஆண்டுகளுக்கு அண்மித்த காலம் கடந்திருந்தும் தகுதியான பிரசைகள்/ சேவை நாடுனர் நியதிச்சட்டம் அங்கீகரிக்கப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை | தயாரிககப்பட்ட வரைபு போதியதாக இல்லாததால் அதனை மீண்டும் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 2017 யூன் 28 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 65,032,290 கிரயமான ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் 18 விடயங்கள் தொடர்பான தகவல்கள் கணக்கு தணிக்கையாளர் நாயகம் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | வாகனங்கள் சம்பந்தமான தகவல்கள் மாத்திரம் கணக்கு தணிக்கையாளர் நாயகம் அலுவலகத்தினால் சேகரிக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 தகவல் தொழில்நுட்ப பொது கட்டுப்பாட்டு முறைமை

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| அதிகாரசபையின் தரவு முறைமையை தன்னியக்கப்படுத்தும் ஒப்பந்தம் ரூபா 29 மில்லியனுக்கு 05 ஆண்டுகள் காலத்திற்கு ஒரு தனியார் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 12,253,328 செலுத்தப்பட்டிருந்தது. எனினும் உரிய தனியார் கம்பனியின் கவனயீனம் அல்லது வேண்டுமென்றே இந்த தரவு முறைமைக்கு் உள்ளடக்கப்பட்டிருந்த சில தகவல்கள் அழிக்கப்பட்டிருந்ததுடன் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் புலனாய்வு நடவடிக்கைகள் முடிவடையும் வரை இச்சேவை செயற்பாடற்று வைக்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக நியமிக்கப்பட்ட விசேட குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் மூலம் முறைமையிலிருந்து அழிக்கப்பட்ட தரவுகளை மீள ஸ்தாபிக்க முடியாது என தெரிவிக்கப்பட்டிருந்ததுடன் இந்த அறிக்கைத் திகதி வரை இடம்பெற்ற நட்டங்களை | COPE குழுவின் கட்டளையின் அடிப்படையில் புலனாய்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அதன் தீர்மானத்தின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | பொருத்தமான தகவல் முறைமை துரிதமாக ஸ்தாபிக்கப்பட வேண்டியதுடன் கம்பனிக்கு எதிராக மேலதிக நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |

அறவீடு செய்வதற்கு அல்லது உரிய கம்பனிக்கு எதிராக மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள ரூபா 595.08 மில்லியன் மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 1,896.90 மில்லியனாக இருந்ததனால் நிதி விளைவுகளில் ரூபா 1,301.83 மில்லியன் வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் முழு வருமான வரி செலவு அதிகரித்தலும், வருமான வரிக்காக குறிப்பிடத்தக்க அளவான தாமத வட்டி செலுத்த வேண்டி ஏற்பட்டமையும், வட்டி வருமானம் குறைவடைந்தமையும் இந்த நிதி விளைவுகளில் வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமான செலவு விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

முன்னைய ஆண்டிற்கான ரூபா 959.24 மில்லியனான வருமான வரி செலவுகள் மீளாய்வாண்டில் ரூபா 1,702.55 மில்லியன் வரை ரூபா 743.31 மில்லியனால் அதாவது 77 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் அச்செலவுக்கு மேலதிகமாக முன்னைய ஆண்டிற்கு முன்னர் சில ஆண்டுகளின் வருமான வரி சரியாக கணிப்பீடு செய்யப்படாமையின் காரணமாக ரூபா 279.17 மில்லியனான எதிர்பாராத தாமத வட்டி செலவினையும் மீளாய்வாண்டில் செலவு செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது. மேலும் முன்னைய ஆண்டிற்கான ரூபா 1,046.12 மில்லியனான வட்டி வருமானம் மிளாய்வாண்டில் ரூபா 711.44 மில்லியன் வரை 32 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகளை ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 14(ஓ) உப பிரிவின் பிரகாரம் மேம்படுத்தல் நடவடிக்கைகளுக்குரிய கைத்தொழில் மற்றும் வியாபாரச் செலவுகள் தொடர்பான தரவுகளை உள்ளடக்கி இலங்கையின் மருந்துகள், மருத்துவ உபகரணங்கள், வரையறுக்கப்பட்ட உற்பத்திப் பொருட்கள் அல்லது ஆய்வுரீதியான மருந்து தயாரிப்புக்களை பயன்படுத்துதல் தொடர்பாக அதிகாரசபையினால் தரவுகள் சேமிக்கப்பட்டிருக்காததுடன் அவ்வாறு தரவுகளை சேகரிக்க கூடிய வகையிலேனும் ஒரு நடை தயாரிக்கப்பட்டிரக்கவில்லை. | ஒரு நடைமுறை தற்பொழுது தயாரிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் காலங்களில் அதனை தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | அதிகாரச்சட்டத்தில் குறிப்பிட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அதிகாரச் சட்டத்தின் 72(1) மற்றும் 93(1) ஆம் உபபிரிவுகளின் பிரகாரம் | மருத்துவ உபகரணங்களையும் | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | மருத்துவ உபகரணங்கள் மற்றும் வரையறுக்கப்பட்ட உற்பத்திப் பொருட்களை மதிப்பீடு செய்வதற்காக அதிகாரசபையினால் அந்த மதிப்பீட்டுக் குழுவிற்கு பொது வழிகாட்டிக் கோவை வழங்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான வழிகாட்டிக் கோவை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.<br>மேலும் 72(4) மற்றும் 93(4) ஆம் உபபிரிவுகளின் பிரகாரம் மருத்துவ உபகரணங்களினதும் வரையறுக்கப்பட்ட உற்பத்திப் பொருட்களினதும் மதிப்பீட்டினை நடாத்துவதற்கான நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள பின்பற்ற வேண்டிய நடைமுறைகளைக் குறிப்பிட்டு சிறந்த உற்பத்தி நடத்தைகள் தொடர்பான வழிகாட்டிக் கோவைகளையும் ஏனைய உரிய வழிகாட்டிக் கோவைகளையும் நடைமுறைப்படுத்துவதற்கான கட்டளை மீளாய்வாண்டின் போது தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வரையறுக்கப்பட்ட உற்பத்திகளையும் மதிப்பீடு செய்வதற்காக பிரமாணங்களை தயாரித்தல் தற்பொழுது இடம்பெற்று வருகின்றது. | |
| (இ) | அதிகாரச்சட்டத்தின் 74(1) மற்றும் 95(1) உபபிரிவுகளின் பிரகாரம் அனுமதி வழங்கப்படுகின்ற மருத்துவ உபகரணங்களையும் பதிவு செய்யப்பட்ட வரையறுக்கப்பட்ட உற்பத்திப் பொருட்களையும் அமைச்சரினால் காலத்துக்கு காலம் பட்டில்படுத்த வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (ஈ) | அதிகாரச்சட்டத்தின் 83(4)(ஆ) மற்றும் 102(4)(ஆ) உப பிரிவுகளின் பிரகாரம் பதிவு செய்வதற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற மருத்துவ உபகரணங்கள் மற்றும் வரையறுக்கப்பட்ட உற்பத்திப் பொருட்களின் தரத்தை பரீட்சிப்பதறகாக தேசிய மருந்துகளின் தரத்தை பாதுகாக்கும் ஆய்வுகூடத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | புதிய ஒரு ஊழியர் குழு சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளதனால் எதிர்வரும் காலங்களில் இந்த நடவடிக்கையை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும். | -மேற்படி- |
| (உ) | அதிகாரச்சட்டத்தின் 83(6) மற்றும் 102(6) ஆம் உப பிரிவகளின் பிரகாரம் மருத்துவ உபகணைங்களையும் வரையறுக்கப்பட்ட உற்பத்திப் பொருட்களையும் மதிப்பீடு செய்யும் குழு மற்றும் தேசிய மருந்துகளின் தரத்தை பாதுகாக்கும் ஆய்வு | உரிய பிரமாணங்கள் தற்பொழுது தயாரிக்கப்பட்டு வருகின்றது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | கூடத்தினால் பரீட்சித்தல் அல்லது மதிப்பீடு செய்யும் நடைமுறையின் போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள், அந்த நடைமுறகளின் காலப்பகுதி, கூட்டங்களை நடாத்த வேண்டிய முறைமை, கூட்டங்களின் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள், சமர்ப்பிக்க வேண்டிய அறிக்கைகளினால் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் என்பவற்றை உறுதியாகக் காட்டி கௌரவ அமைச்சரின் கட்டளை தயாரிககப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஊ) | அதிகாரச்சட்டத்தின் 84(2) ஆம் உபபிரிவு, 85 ஆம் பிரிவு, 103(2) ஆம் உபபிரிவு, 104 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் பதிவுசெய்யப்பட்ட மருத்துவ உபகரணங்களும் வரையறுக்கப்பட்ட உற்பத்திப் பொருட்களும் தொடர்பாக மற்றும் பதிவுசெய்தல் நிராகரிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில் அந்த நிராகரிப்புக்கள் தொடர்பாக வரத்தமானியில் வெளியிடப்படுகின்ற விதிமுறைமையின் மூலம் பொது மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டிய போதிலும் அதிகாரசபை ஸ்தாபிக்கப்பட்ட திகதியிலிருந்து இன்றுவரை அந்த ஒழுங்குமுறை தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | உரிய தகவல்களை வர்த்தமானியில் வெளியிடுதல் இன்றுவரை மேற்கொள்ளப்படாததுடன் எதிர்வரும் காலங்களில் அதனை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | -மேற்படி- |
| (எ) | தேசிய மருந்துகளை ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை அதிகாரசட்டத்தினை அமுல்ப்படுத்துவதோடு அதுவரை இலங்கையில் மருந்துகள், உபகரணங்கள் மற்றும் அழகுசாதனப் பொருட்களை ஒழுங்குபடுத்துதல் சம்பந்தமாக அமுல்ப்படுத்தி வருகின்ற 1980 இன் 27 ஆம் இலக்க அழகுசாதனப் பொருட்கள், உபகரணங்கள் மற்றும் மருந்துகள் அதிகாரச்சட்டம் நீக்கப்பட்டிருந்தும் அழகுசாதனப் பொருட்களை ஒழுங்குபடுத்துவது தொடர்பான பிரிவு தேசிய மருந்துகளை ஒழுங்குபடுத்துதல் அதிகாரசட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்காததனால் 2017 ஒக்தோபர் 10 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் | அழகுசாதனப் பொருட்களை ஒழுங்குபடுத்துவதற்கான உரிய அதிகாரச் சட்டத்தின் வரைபினை தயாரிப்பதற்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. | அழகு சாதனப் பொருட்களை ஒழுங்குபடுத்துவது தொடர்பான புதிய அதிகாரச் சட்டத்தினை அங்கீகரித்துக் கொள்வதற்கு அல்லது தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்துதல் அதிகாரசபை அதிகார சட்டத்தினை தேவைக்கேற்றவாறு திருத்தம் செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் உத்தேச புதிய அழகுசாதனப் பொருள் அதிகாரசசட்டத்தினை அங்கீகரித்து அமுல்ப்படுத்தும் வரை காணப்படுகின்ற அழகுசாதனப் பொருட்கள், உபகரணங்கள் மற்றும் மருந்துகள் அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளை பயன்படுத்தி அழகுசாதனப் பொருட்களை ஒழுங்குபடுத்தலினை மேற்கொள்வது தேசிய மருந்துகளை ஒழங்குபடுத்துதல் அதிகாரசபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. 1980 இன் 27 ஆம் இலக்க அழகுசாதனப் பொருட்கள், உபகாரணங்கள் மற்றும் மருந்துகள் அதிகாரச்சட்டம் நீக்கப்பட்டு தற்பொழுது 09 ஆண்டுகள் கடந்திருந்தும் அழகுசாதனப் பொருட்களை ஒழங்குபடுத்துதல் தொடர்பான புதிய அதிகாரச்சட்டத்தை தயாரித்து அங்கீகரித்துக் கொள்வதற்கு அல்லது அதிகாரசபை அதிகாரச் சட்டத்தினை தேவைக்கேற்றவாறு திருத்திக் கொள்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஏ) | அதிகாரசபையை எதிராளியாக்கிய ஒரு வழக்கில் அதிகாரசபைக்காக தோன்றியுள்ள அரசாங்க கட்டத்தரணிகளுடன் முறையான தொடர்பினை பேணியிருக்காததன் காரணமாகவும் சட்டத்தரணி உரிய வழக்கிற்கு நிர்ணயிக்கப்பட்ட திகதியில் தோன்றியிருக்காததன் காரணமாகவும் முறைப்பாட்டாளரின் வழக்கு கட்டணமாக ரூபா 50,000 விளைவற்ற செலவினை அதிகாரசபை மேற்கொள்ள வேண்டியிருந்தது. | இவ்வாறான தவறுகள் எதிர்வரும் காலங்களில் இடம்பெறாமல் இருப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | கவனயீனமாக நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தர் சம்பந்தமாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 21 ஆந் திகதிய PED 08/2022 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் | தேசிய மருந்துகளை ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைக்கு | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | சுற்றறிக்கையின் பிரகாரம் சேமிக்கப்பட்ட விடுமுறைக்காக படிகளைப் பெற்றுக்கொள்வதற்கு உரிமை இல்லாது 2023 ஆம் ஆண்டிற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 2,632,351 விடுமுறைப்படி செலுத்தப்பட்டிருந்தது. | சேர்த்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களை தொடர்ந்தும் வைத்திருக்கும் குறிக்கோளில் இந்த விடுமுறைக்கான படியினை செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | திறைசேரியினதும் அமைச்சரவையினதும் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2022 ஏப்ரல் 26 ஆந் திகதிய 03/2022 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் 03(viii) ஆம் பந்தி மற்றும் 02 ஆம் பந்தியின் பிரகாரம் அமைச்சரவை அங்கீகாரமின்றி விசேட படிகள் மற்றும் வருகைப் படிகளாக ரூபா 25,755,847 செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டின் போது பணிப்பாளர் சபைக் கூட்ட அறிக்கைகளை தயாரிக்கும் படியாக ஒரு அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு ரூபா 75,000 தொகையும் சரிசெய்தல் படியாக பிரதான நிறைவேற்று உத்தியோகத்தருக்கு ரூபா 1,432,200 தொகையும் திறைசேரி அங்கீகாரமின்றி செலுத்தப்பட்டிருந்தது. | தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களை தொடர்ந்தும் வைத்திருப்பதற்காக இப்படிகள் செலுத்தப்பட்டதுடன் விசேட படிகள் மற்றும் வருகைப் படிகளுக்காக அங்கீகாரத்தினை வேண்டி சுகாதார அமைச்சின் மூலம் பொதுத்திறை சேரிக்கு ஒரு கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (இ) | 2023 சனவரி 27 ஆந் திகதிய 01/2023 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் 6(அ) பந்தியின் பிரகாரம் வெளிநாட்டு கருத்தரங்குகளுக்காக உள்நாட்டு நிதியை பயன்படுத்தி உத்தியோகத்தர்கள் பங்குபற்றாதிருக்க வேண்டிய போதிலும் இதற்கு முரணாக 04 உத்தியோகத்தர்களுக்கு முன்னைய ஆண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 1,983,315 தொகையை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய 04 உத்தியோகத்தர்களுக்கு சுகாதார அமைச்சு செயலாளரினால் கடமை விடுமுறை அங்கீகரிக்கப்பட்டுள்ளது எனவும் அதற்காக தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையினால் மேற்கொள்ளப்படும் செலவுகளை மீளச் செலுத்துவதற்கும் அவர்கள் இணக்கப்பாட்டினை வெளிப்படுத்தியுள்ளார்கள். | பாதீட்டு சுற்றறிக்கை மற்றும் தாபன விதிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2024 சனவரி 28 ஆந் திகதிய 01/2024 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 12 ஆம் பந்தியின் பிரகாரம் கடுமையான நிதி ஒழுக்கத்தைப் பேணுவதற்காக அனைத்து வகையிலான அனுசரணைகளை வழங்குவதனை | 2 ஆவது தரத்தில் 10 ஆண்டுகள் கடந்ததன் பின்னர் பட்டப் பின்படிப்பினை பயில்வதனை விட அதனை ஏற்கனவே பயில்தல் மிகவும் வினைத்திறனானது | தாபன விதிக் கோவையிலுள்ள ஏற்பாடுகள், அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் உரிய ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் |

| | | | |
|---|---|---|---|
| | நிறுத்த வேண்டிய போதிலும் அதிகாரசபையினால் சேவையில் நிரந்தரமாக்கப்படாத ஒரு ஆண்டிற்கு குறைந்த சேவைக் காலத்தினைக் கொண்ட முதலாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தியடையாத மற்றும் I ஆம் தரத்திற்கு பதவியுயர்த்தப்படாத 11 மருந்து மதிப்பீட்டு உத்தியோகத்தர்களுக்கு தரம் II இல் 10 ஆண்டுகள் சேவைக்காலத்தை பூர்த்தி செய்து I ஆம் தரத்திற்கு பதவியுயர்த்தி 05 ஆண்டுகளுக்குள் சித்தியடைய வேண்டிய 2 ஆவது வினைத்திறமைகாண் தடைக்குரிய பட்டப் பின்படிப்பினை பயில்வதற்கு ரூபா 4,360,000 செலுத்தப்பட்டிருந்தது. | என்பதனால் அதற்காக அனுசரணை வழங்க வேண்டும் என பணிப்பாளர் சபை கருத்துரை வழங்கியுள்ளது எனவும் இந்த உத்தியோகத்தருடன் நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகளை உள்ளடக்கி முறைப்படியான உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது எனவும் தெரிவிக்கிறேன். | பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | அதிகாரசபையின் உத்தியோகத்தர்களாக செயற்படுகின்ற ஒழுங்குபடுத்துதல் பிரிவுகளின் தலைவர்கள் உரிய மதிப்பீட்டுக் குழுக்களின் தவலைவர்களாகவும் அதிகாரசபையின் ஒரு மருந்துக் கலவையாளர் உரிய மதிப்பீட்டுக் குழுக்களின் அங்கத்துவத்தினை வகிக்கின்ற சந்தர்ப்பங்களில் உரிய குழுவிற்கு பங்குபற்றுவதற்காக மீளாய்வாண்டின் தொடக்க அரையாண்டில் அதிகாரசபையின் 18 உத்தியோகத்தர்களுக்கு குழுப்படியாக ரூபா 449,500 செலுத்தப்பட்டிருந்தது. 2024 ஏப்ரல் 19 ஆந் திகதிய பணிப்பார் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் 2024 ஏப்ரல் 22 ஆந் திகதியிலிருந்து இக்குழு படியாக ரூபா 5,000 வரை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன அதிகாரசபை அதிகாரசசட்டத்தின் 13 ஆம் பிரிவின் பிரகாரம் நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் இணக்கப்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க முறையான அங்கீகாரமின்றி 2024 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரை ரூபா 1,711,500 தொகை வெளி விசேட நிபணர்கள் மற்றும் அதிகாரசபையின் உத்தியோகத்தர்களுக்கு | மிகைக் கொடுப்பனவுகளை மீள அறவீடு செய்வது சம்பந்தமாக பணிப்பாளர் சபைக்கு தெரியப்படுத்தி தேவையான மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. 2024 ஒக்தோபர் 25 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டததின் போது அதிகாரசபையின் உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தப்படுகின்ற ரூபா 5,000 படியினை மிண்டும் ரூபா 1,500 வரை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தும் அதுவரை 2024 ஏப்ரல் 22 ஆந் திகதியிலிருந்து யூன் 30 ஆந் திகதி வரை அதிகாரசபையின் 17 உத்தியோகத்தர்களுக்கு முறைபடிபயான அங்கீகாரமின்றி ரூபா 217,000 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மருந்துகளின் தரவு முறைமையை மறுசீரமைப்புச் செய்யும் ஒப்பந்தம் 2020 நவம்பர் 11 ஆந் திகதி ரூபா 6,902,000 தொகைக்கு ஒரு தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. 2006 பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.9.1(ஆ) பிரிவின் பிரகாரம் முறையான ஒப்பந்த உடன்படிக்கை செய்துகொள்ளக்கட்டிருக்காததுடன் வழிகாட்டிக் கோவையின 8.12.2 ஆம் பிரிவின் பிரகாரம் வேலைகளை முடிவுறுத்துதல் தொடர்பாக சான்றிதழினைப் பெற்றுக்கொள்ளாது 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 4,774,752 செலுத்தப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரை முறைமை விளைவற்று காணப்பட்டது. | மருந்துகளின் தகவல்களை மறுசீரமைப்புச் செய்யும் தரவு முறைமை சம்பந்தமாக கோப் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் புலனாய்வு மேற்கொள்ளப்படுவதுடன் அதற்கிணங்க மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் முறைமையை நாளதுவரையாக்கி துரிதமாக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 மனிதவளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| அதிகாரசபையின் சிரேஷ்ட மட்டத்திலுள்ள பதவிகளுக்கு மத்தியில் நிருவாகம், நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட 04 பிரதான பணிப்பாளர் பதவிகள் வெற்றிடமாக இருந்தன. | சிரேஷ்ட மட்டத்திலுள்ள HM தரத்திலுள்ள பதவிகளுக்காக ஆட்சேர்பபு நடைமுறை தயாரித்து அங்கீகாரத்திற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்கத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | முறையான அங்கீகாரத்தின் கீழ் வெற்றிடங்களை துரிதமாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 3.5 வாகன முறைமை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய 02/2017 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் சுகாதார அமைச்சின 06 வாகனங்களை இன்று வரை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கில்லை. | வாகனங்களை பொறுப்பேற்பது சம்பந்தமாக தேசிய மருந்துகளை ஒழுங்குபடுத்தும் அதிகாரசைபயின் தரப்பினர்கள் உரிய கோவைகளில் கையொப்பமிட்டு அமைச்சிற்கு அனுப்பிவைத்துள்ளனர். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

4. **கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்**

4.1 **தந்திரோபாயத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் வெளியிடப்பட்ட அரசாங்க தொழில் முயற்சிகளுக்கான நிறுவன ரீதியான கட்டுப்பாட்டு வழிகாட்டிக் கோவையின் 2.3 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக தந்திரோபாயத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் தந்திரோபாயத் திட்டத்தினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

4.2 **வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் வெளியிடப்பட்ட அரசாங்க தொழில் முயற்சிகளுக்கான வழிகாட்டிக் கோவையின் பின்னிணைப்பு 01 இன் 02(அ) பந்தியின் பிரகாரம் செயற்பாடுகளை தெளிவாக காட்டும் வகையில் நிறுவனத்தின் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டம் அதற்கு இணங்க தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய சரிசெய்தல் செய்யப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

4.3 **உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 40 ஆம் பிரிவு மற்றும் 2021 நவம்பர் 16 | 2025 மார்ச் 05 ஆந் திகதி சேர்த்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர் விலகிச் | கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் உரிய |

| | | |
|---|---|---|
| ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் வெளியிடப்பட்ட அரசாங்க தொழில் முயற்சிகளுக்கான நிறுவன ரீதியான கட்டுப்பாட்டு வழிகாட்டிக் கோவைகளின் 4.4 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரு உள்ளக் கணக்காய்வாளர் நியமிக்கப்படவில்லை. | சென்றுள்ளார். அடுத்த தகமையுள்ள உத்தியோகத்தர் நியமனத்தை பொறுப்பேற்காததனால் சுகாதார அமைச்சிலிருந்து பதில் கடமை பார்ப்பதற்காக ஒரு உத்தியோகத்தரினை நியமிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |